UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தோடரின மக்கள் கால்நடைகள் (எருமைகள்)

**தே. வசந்தி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் தே. ராஜகுமார்**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் 641 020

**ஆய்வுச் சுருக்கம்**

நம் நாட்டில் பழங்காலத்திலிருந்து – பசுக்களைப் போலவே எருமைகளும் முக்கிய கால்நடைச் செல்வமாக மதிக்கப்பட்டு வருகிறது. எருமை இனம் முதன் முதல் நம் நாட்டில் தான் தோன்றியது என்றும், பின் இங்கிருந்து பிற நாடுகளுக்குப் பரவியது என்றும் உயிர் நூல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே, அயல்நாட்டு எருமைகளெல்லாம் நம் நாட்டின் சந்ததிகளேயாகும். இன்று உலகம் முழுவதும் எருமை இனம் பரவி இருந்தாலும், அவற்றின் தோற்றமும், உடலலையும், கொப்புகளின் வளர்ச்சியும் அந்தந்த நாடுகளின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப மாறியுள்ளன. அத்தகைய எருமைகள் தோடரினத்தில் தோன்றிய வரலாறு குறித்து இக்கட்டுரை கள ஆய்வாக அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்**

சாஸ்திர முறை - திருவிழாக்கள் - பித்திர் - தொழில் - குழந்தைகளுக்கு பெயர் வைத்தல் - எருமைகளை வாரிசுகளுக்குப் பிரித்து கொடுத்தல்.

**முன்னுரை**

தோடர் பழங்குடியினர் நீலகிரியில் வாழ்கிறார்கள். எருமைகளின் உற்பத்தி சிறப்பாக நீலகிரி மலைப்பிரதேசத்தில் மட்டும் தோடர்களிடமிருந்து வருகிறது. தோடர்கள் நீலகிரி மலைப் பிரதேசத்திலேயே வாழ்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கையை ஒட்டிய எல்லாச் சடங்குகளோடும் எருமைகள் சம்பந்தப்படுகின்றன. குழந்தைகள் பிறந்தாலும், விவாகம் நிச்சயிக்கப்பட்டாலும் அல்லது மரணம் முதலிய துக்க சம்பவங்கள். நேரிட்டாலும், எருமைத் தொடர்புகொண்ட சடங்குகளாகவே இருக்கும்.

தோடர்கள் வளர்க்கும் எருமை இனம் பால் பெருக்கிற்குப் புகழ் பெற்றது. நாளொன்றுக்கு இருபது படிண்டு பால் தரக்கூடியது. என்றாலும்,இவ்வின எருமைப்பால் தடிப்பாக இருக்கும். வெண்ணெய் அதிகம் கொடுக்கும், மலைப் பிரதேசங்களைத் தவிர வேறிடத்தில் வளர்த்துப் பயன்பெற முடியாது.

இந்த எருமைகள் அடையாளம் கொம்பு அரைவட்ட வடிவமாக இருக்கும் அந்த கொம்பு நிலாவைக் குறிப்பதாகும். யானையைப் போன்ற உடலும், குட்டையான கால்களும், கழுத்தில் பட்டையும், நீண்ட வாலுமாக இருக்கும் இந்த எருமைகளை பாரம்பரியமாக புனிதமான எருமைகளாக (மலை எருமைகள்) கருதப்படுகின்றன. தோடர்களின் கால்நடைகளான மலை எருமைகள் மேய்ப்பது அவர்களின் குலத்தொழிலாக இருந்தது. எனவே தோடர்கள் வசிக்கும் பகுதிகளில் ஒன்றான தமிழக மந்து பகுதிகளில் கள ஆய்வுக் குறித்து தரவுகளின் அடிப்படையில் தோடர் இன மக்களின் கால்நடைகள், [எருமைகள்]

என்னும் இவ்வாய்வு கட்டுரை ஆராயப் படுகிறது.

**எருமைகள் தோன்றிய வரலாறு**

ஒட்டார்ஸ் என்ற மலைதெய்வத்தின் நெற்றியில் வேர்த்ததால் வேர்வையில் இருந்து தோன்றியது தீ எருமைகள் ஆகும். தீ எருமைகளின் வரட்டுச் சாணியை உருட்டியதால் கன்றுக்குட்டிகள். சில கன்றுக் குட்டிகளிலிருந்து வந்த எருமைகள் கொஃகுளி எருமைகள் என்பார்கள். கொஃகுளி வோர்ஸ் கோயிலுக்கு பூசாரி பால் கரப்பார்கள்.

**எருமைகளுக்கு பெயர் வைக்கும் சாஸ்திர முறை**

எருமைகளுக்கு பெயர் வைக்கும் சாஸ்திர முறை தோடர் மக்களிடையே உள்ளது. எருமைகள் முதல் கன்றுக் குட்டி போட்டு முதல் முறையாகப் பால் கரக்கும் போது அந்த எருமைக்குப் பெயர் வைப்பார்கள். கோயில்எருமைகளுக்கென்று தனிப்பெயர்கள் இருக்கும்.




14 குலத்தெய்வங்களுக்கும் தனித்தனி குலப்பெயர்கள் இருக்கும். 14 தனிக்குல எருமைகள் பெயர் இருக்கும். அந்தப் பெயர்களைக் கோயில் வழிபாட்டின் போது பூசாரி குறிப்பிட வேண்டும்.

* நோழ் - கரோஷ்கிர் – கேன்நோகு
* கார்ஸ் – இன்னேர்வின் – இன்னேற்ஷழ்க்கு
* தோரோடு – ஓர்ஸ் ஊம் ஒல்மேதி
* கேரோடு – மொணியேப்பிர், மோவில்த்கொர் .
* மேர்டு – மொஜ் ஒத்வின் – மொகுர்டு தெழ்க
* நிர்டி – கேட்டோன் – கேக்கெர்
* பிர்கோர்டு – கேட்டோன் – கேக்கெர்
* இன்கித்- ஓர்ஸ்ஊம்
* தேவாகு – குஷ்இர்கேள்வ் – பர்ஸ்ஓர் தொன்ம்
* காய்நிர்ஸ் – குர்டுயேப்பிர் – கெர்டுஒநோகு
* ஓம்கார்ஸ் – நாஸ்பர்ஸ்இர் – நர்ஸ் ஊவ
* க்கூர்டு – கீழ்க் வெட் – தோழ்க்வின்

கோயில் விளக்கு ஏற்றும் போதும் எருமைகளைத் தொழுவத்தில் அடைக்கும் போது இந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டும்.




**திருவிழாக்கள்**

கூம்புவடிவக் கோயில்கள், மற்றும் வானவில் அமைப்பு கோயில்கள் உள்ளன. கூம்பு வடிவக் கோயில்களை பெண் தெய்வக் கோயில்கள் போவோர்ஸ் என்றும், வானவில் அமைப்புக் கோயில்களா பொள்றி வோர்ஸ் என்றும் அழைக்கப்படுகின்றன. கூம்பு வடிவக் கோயில்கள் மற்றும் வானவில் அமைப்பு கோயில்கள் போன்றவை தோடர்களின் குலத்தெய்வக் கோயில்களாகும்.

தோடர் எருமைகளை வீட்டு எருமைகள் மற்றும் கோயில் எருமைகள் என்றும் இரண்டு வகைகளாகப் பிரிப்பர்.

தோடர்கள் கோயில்களை தீ, போவோர்ஷ், பொள்லிவோர்ஷ் என்றும் அழைப்பார்கள். மூன்று வகையான கோயில்கள் இருக்கின்றன. தீ என்ற கோயிலுக்கு இருக்கின்ற எருமைகளைத் தோடர் பூசாரி பால் கரப்பார் அந்த பூசாரிப் பெயர் போபொள்விவோர்ஷ் என்று அழைப்பார்கள். கரக்கும் எருமைகளைப் பொஸ்த்யிர் என்று அழைப்பார்கள். வீட்டுக்குக் கரக்கும் எருமைகளை பித்திர் என்றும் அழைப்பார்கள், கோயில் எருமைகளை பூசாரிகள் பாலை கரந்து குலத்தெய்வங்களுக்குக் கோயிலில் பால் அபிஷேகம் செய்வர். பின்பு தயிர் கடைந்து, நெய் எடுத்து, நெய் விளக்கு ஏற்றுவர். கோயிலில் விளக்கேற்றுவதற்கு மலை எருமைகளின் நெய்யினால் விளக்கேற்ற வேண்டும்.

எருமைகளுக்கு உப்பு தண்ணீர் கொடுத்தல் கோர் உப்பு , பொனி உப்பு, மோர் உப்பு என்று வருடத்திற்கு மூன்று முறை நடக்கும்.

புனித ஆறு பகுதிகளில் குழி எடுத்து, தண்ணீர் ஊற்றி, உப்பு போட்டு பிறகு உப்புத் தண்ணியை எருமைகளை குடிக்க வைக்க வேண்டும். ஒவ்வொரு குடியிருப்பிலும் உப்புச் சடங்கு செய்வார்கள். கோயில்

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

எருமைகளின் பாலை நேரடியாக யாரும் குடிப்பதில்லை. கோயில் பூசாரி தயிர் கடைந்து மோர், வெண்ணையாக பிரசாதமாக வீட்டிற்குத் தருவார்.

கோயில் திறந்து புதுப்புல் போட்டு கும்பாபிஷேகத்தின் போதும் அருகில் இருக்கும் தொழுவத்தில் எருமைகள் இருக்கும். பூசாரி பால் கரந்து அபிஷேகம் செய்ய வேண்டும்.





### பித்திர்

பித்திர் வீட்டு எருமைகள் தோட ஆண்கள் எருமைகளின் பாலைக்கரந்து விற்பனைச் செய்கிறார்கள். வீட்டில் தயிர் கடைந்து வெண்ணெய், நெய் எடுத்து நெய் உருக்கி வீட்டில் விளக்கு ஏற்றுவார்கள்.

கோயில்களிலும், வீடுகளிலும் உருவ வழிப்பாடு இல்லை என்றாலும். விளக்கு ஏற்றி வழிப்படுவது பாரம்பரிய முறையாகும். இயற்கையாக மேய்ச்சலில் ஈடுபடுவதால் எருமைப்பாலில் புரதச் சத்து, கொழுப்புச் சத்து மற்றும் அதிகமாக மருத்துவக்குணம் உள்ளது தெய்வீக எருமைகளாக கருதுவதால் எருமைகளைக் கட்டிப் போடக்கூடாது.

### தொழில்

தோடர்கள் எருமைகளை மேய்ப்பது தங்களுடைய முக்கியத் தொழிலாக கருதி வந்தனர். தங்களுடைய மேய்ச்சல் நிலத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்தி தற்பொழுது விவசாயம் செய்து வருகின்றனர். தோடர்களின் வாழ்க்கை முறை மாறினாலும் எருமைகளின் முக்கியத்துவம் இன்று வரையில் உள்ளது.

### குழந்தைகளுக்கு பெயர் வைத்தல்

கோயில் திறந்த பிறகு குழந்தைகளுக்குப் பெயர் வைத்தல் வேண்டும். குழந்தைகளைக்கு பெயர் வைத்தல் மொக மூத்தார் தெற்துத் என்று அழைப்பர். விடியற் காலையில் குழந்தையை வெளியில் எடுத்துச் சென்று கருப்பு மைனா (கார்பில்ச்) கத்துவதை குழந்தை கேட்க வேண்டும். வானத்திலுள்ள விடிவெள்ளியைக் குழந்தை பார்க்கவேண்டும். ஆண் குழந்தையாக இருந்தால் கோயில் வாசலைத் தொழுது வணங்க வேண்டும். எருமைகளின் வாலைத் தொட வேண்டும். பெண் குழந்தைகள் வீட்டிற்கு வெளியில் இருந்து கோயிலைப் பார்த்த மாதிரி நிலத்தைத் தொழுது வணங்க வேண்டும். குழந்தையின் தாய்மாமா மூன்று தடவை பெயர் சொல்ல வேண்டும் ஆண் குழந்தைகளுக்கு கல், மரம், மலை, சூரியன் போன்ற பெயர்களையும் பெண் குழந்தையாக இருந்தால் நிலா, ஆறு, பூ, ஆபரணங்கள் போன்ற பெயர்களையும் வைத்தல் வேண்டும். இவ்வாறு பெயர் வைத்தல் முறையிலும் எருமைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

### எருமைகளை வாரிசுகளுக்குப் பிரித்து கொடுத்தல்

தோடர்கள் எருமைகளைச் சொத்தாகக் கருதுகின்றனர். தோடர்களுடைய வாழ்க்கையை ஒட்டிய எல்லாச் சடங்குகளோடும் எருமைகள் சம்பந்தப்படுகின்றன. ஆண்களுக்கு எருமைகளை சமமாக பிரித்துக் கொடுப்பர். ஆண்களுக்குப் பிரித்துக் கொடுப்பது கூர் என்று அழைப்பர். பெண்களுக்கு விருப்பப்பட்டு பரிசாகக் கொடுப்பர். பெண்களுக்குப் பிரித்துக் கொடுப்பது அர்குப்பின் என்று அழைப்பர்.

### முடிவுரை

தோடர்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையாகும். பிறப்பு முதல் இறப்பு வரையிலும் அனைத்து சடங்கிலும் எருமைகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் தோடர் பழங்குடியினருக்கு எருமை வளர்ப்பு ஒரு வாழ்க்கைமுறையாகும் மற்றும் அவர்களின் வாழ்க்கை பெரும்பாலும் இந்த எருமைகளைச் சுற்றியே உள்ளது. இது அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

### தகவலாளர் பட்டியல்

◊ வாசமல்லி (தோடர் இனப்பெண்) வயது 74, தமிழகமந்து, நீலகிரி.